முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1602

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**17.02.2024**, சனிக்கிழமை

1. ஏழாம் படை வீடு கொண்ட ஞானியே
   ஏழ்மையை விரட்ட வந்த தவசியே
   காலனையும் வென்று இந்த கலியுகத்தில்
   கந்தப்பெருமான் சக்தியாகவே வாழுகின்ற குரு அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு கந்தப்பெருமான்
   என் சக்தியாக வாழுகின்ற அரங்கனே
   அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி ஆற்றல்பட அரங்கனுள் யானிருந்து

(சோபகிருது வருடம் மாசி மாதம் 05 ம் நாள், 17.02.2024, சனிக்கிழமை)

3. வரங்கள் கூட்டி நாளும் நாளும் அரங்கனுக்கு
   வல்லமை காட்டி வருகின்றேன்
   வருகவே அரங்கன் தொடர்புக்கு வந்து
   வையகத்தில் ஞானம் பயின்றால்
4. தர்மவான்களாக இந்த உலகோர்
   தரணிமெச்சுகின்ற ஞானவான்களாக
   ஆகவே நிலைகள் மாறி
   ஆற்றல்கூடி இனிதே அகிலத்தில்
5. மாற்றம் பல செய்வர்
   மண்ணுலகில் அரங்கனால் இந்த அற்புதம் நிகழ இருக்க
   அரங்கனை குருவாக ஏற்ற மக்களுக்கு
   ஆறுமுகன் என் அருளாசி கிட்டுவதோடு
6. அழியாமை என்கின்ற மகாசக்தியும் கிட்டி
   மாறுதல் பேருலகமெங்கும் நடக்கக்கூடும்
   மக்கள்களை வஞ்சிக்கின்ற துவேசிக்கின்ற
   இடரான ஆளுமை நிலைகள் எல்லாம்

7. தேக்கமின்றி உலகை விட்டகன்றோடி
தேசிகன் வழி காட்டலில்
ஞான ஆட்சிக்காலமாக மாறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—